PAFFREL

නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරිත්වය.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.

PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

# ஊடக அறிக்கை

2026 ஒக்டோபர் 22

கொழும்பு

## "மாகாண சபைத் தேர்தலை மேலும் தாமதமின்றி நடத்துமாறும், வாக்காளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாற்று வாக்கு முறை ஒன்றைப் பயன்படுத்தும் முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துமாறும் ப.ஃவ்ரல் அமைப்பு கோருகிறது"

*மாற்று வாக்களிப்பு முறை தொடர்பில் அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ள நிலையில், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு அரசாங்கத்திடமும், உரிய அமைச்சுகளுமிடமும், பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களிடமும் கேட்டுக்கொள்கிறது.*

கொழும்பு – சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (ப.ஃவ்ரல் அமைப்பு) இன்று பாராளுமன்றம், உரிய அமைச்சுகள் மற்றும் தேர்தல் தொடர்பான பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களிடம் விடுத்துள்ள கோரிக்கையில், நீண்ட காலமாகத் தாமதமாகியுள்ள மாகாண சபைத் தேர்தலை மேலும் தாமதமின்றி நடத்துமாறும், அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் உள்ளிட்ட ஏனைய தேர்தல்களில் மாற்று வாக்களிப்பு முறைக்கு அவசியமான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தி, அதனைப் பரீட்சிக்கும் முன்னோடித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ப.ஃவ்ரல் அமைப்பு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. இதன்போது, மாற்று வாக்களிப்பு முறை தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அக் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் ப.ஃவ்ரல் அமைப்பு ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியது.

### மாகாண சபைத் தேர்தல் : தொழில்நுட்பப் பிரச்சினையல்ல, அரசியல் தீர்மானமாகும்

இறுதியாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு தற்போது ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் கடந்துள்ளது. பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமை காரணமாக, மாகாண சபைகள் ஆளுநர்களின் கீழ் செயற்பட்டு வருகின்றன.

தற்போதைய ஆளுங்கட்சியின் 2024 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்ட **"வளமான நாடு – அழகான வாழ்க்கை"** தேர்தல் விஞ்ஞாபனத்தல், தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்திற்குள் நடாத்தி, மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல் (பக்கம் 230 / தமிழ் பிரதி) உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2025 மே மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்ட போதிலும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ள நிலையிலும் மாகாண சபைத் தேர்தல்கள் இதுவரை நடத்தப்படவில்லை. அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் கடந்த போதிலும், நீண்ட காலமாகத் தாமதமாகியுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான தெளிவான கால அட்டவணையை வெளியிடுவதற்கோ அல்லது

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

வெளிப்படையான ஆயத்தங்களைக் வெளிகாட்டுவதற்கோ அரசாங்கம் இதுவரை காத்திரமாகச் செயற்படவில்லை.

தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டுத் தேர்தல்களைத் தொடர்ந்து ஒத்திவைப்பதற்கு மூன்று அரசாங்கங்களும் அவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளன. எனினும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையானது ஒரு அரசியல் தீர்மானமாகும். அரசாங்கம் அதற்கான தீர்மானத்தை எடுக்குமாயின், தேவையான சட்டத் திருத்தங்களை மூன்று மாத காலப்பகுதிக்குள் மேற்கொள்ள முடியும்.

தேர்தல்களை விரைவில் நடத்தக்கூடிய வழிவகைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த 2026 மே மாதம் 26 ஆம் திகதி ப∴வ்ரல் அமைப்பு, அரசியல் கட்சிகளையும் சிவில் சமூக அமைப்புகளையும் கொழும்பில் ஒன்றுகூட்டியது. அக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஒரேயொரு அரசியல் கட்சியைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும், இணைந்த கூட்டறிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு உடன்பாடு தெரிவித்தன. அதாவது, பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இறுதித் தீர்மானம் கிடைக்கும் வரை 2017 ஆம் ஆண்டின் 17 இலக்கச் சட்டத்திற்கு முன்னர் நடைமுறையிலிருந்த தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும், தன்னார்வ அடிப்படையில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் 25 வீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் அவை உடன்பட்டன. இக்கலந்துரையாடலில் ஆளுங்கட்சியின் பிரதிநிதியொருவரும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சியின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். குறித்த இணைந்த கூட்டறிக்கை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கும் அரசாங்கத்திற்கும் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

## மாற்று வாக்களிப்பு முறை: அரசியல் கட்சிகள் பவ்ரல் அமைப்புக்கு முன்வைத்த கருத்துக்கள்

தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல இயலாமை காரணமாக எந்தவொரு தகுதியான வாக்காளருக்கும் அவரது வாக்குரிமை மறுக்கப்படக் கூடாது. அந்த நோக்கை அடைந்துகொள்ளும் பொருட்டு மாற்று வாக்களிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ப∴வ்ரல் அமைப்பு நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், புதிதாக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. தொழில்சார் பொறுப்புகள், சுகாதாரப் பிரச்சினைகள், தடுத்து வைக்கப்பட்டிருத்தல், வாக்களிப்பு நிலையத்திற்கு உள்ள தூரம் அல்லது கடமைசார் பொறுப்புகள் போன்ற காரணங்களினால் வாக்களிக்க இயலாத நபர்களுக்கும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்த யோசனைகளின் முக்கிய நோக்கமாகும். இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஐந்து முன்மொழிவுகள் தொடர்பில் 23 அரசியல் கட்சிகள் வெளிப்படுத்திய கருத்துக்களை ப∴வ்ரல் அமைப்பு பகுப்பாய்வு செய்துள்ளது. இந்தப் பகுப்பாய்விற்கு அடிப்படையாக அமைந்தது குறித்த அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் சேகரிக்கப்பட்ட தகவல்களும் தரவுகளுமாகும். ப∴வ்ரல் அமைப்பு ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாக மாற்று வாக்களிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதற்காகக் குரல்கொடுத்து வருவதுடன், தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்தைச் சென்றடைய முடியாமை காரணமாக இலங்கைக்குள் வாழும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்களுக்குத் தமது வாக்கைப் பதிவு செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்படுவதாகக் கண்டறிந்துள்ளது.

- **தபால் மூல வாக்களிப்பு** : 23 அரசியல் கட்சிகளுள் 22 கட்சிகள் (96 வீதம்) தற்போது தேர்தல் கடமைகளில் மாத்திரம் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ள தபால் மூல வாக்களிப்பு உரிமையை விரிவுபடுத்துவதற்கு உடன்பாடு தெரிவித்தன. ஒரு கட்சி மாத்திரம் இதற்கு உடன்படவில்லை. தனியார் துறை மற்றும் சுதந்திர வர்த்தக வலைய ஊழியர்கள், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள், மாற்றுத்திறனாளிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்கள் அத்துடன் வெளிநாட்டுகளில் பணிபுரிவோர், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் மற்றும் அகதிகள் ஆகியோருக்கும் தபால் மூல வாக்களிப்பு வசதியை விரிவுபடுத்துவது குறித்துக் கட்சிகளால் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

எந்தவொரு குற்றத்திற்கும் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படாதவர்களான விளக்கமறியல் சந்தேகநபர்களுக்கு இந்த வசதியை வழங்காதிருப்பதை விசேடமாக நியாயப்படுத்துவது பொருத்தமற்ற ஒரு விடயமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

- **முற்கூட்டியே வாக்களித்தல், மாற்று வாக்களிப்பு நிலையங்கள், நடமாடும் வாக்களிப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு வாழ் இலங்கையர்களின் வாக்குரிமை:** இந்த முன்மொழிவுகள் எவற்றுக்கும் எந்த கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த முன்மொழிவுகள் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய கட்சிகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது. நடமாடும் குழுக்கள் ஊடாக பல்வேறு இடங்களுக்கும் சென்று வாக்குகளைப் பெற்றுக்கொள்வதை விட, சிறைச்சாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் நிலையான அல்லது தற்காலிக வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதே மிகவும் பொருத்தமானது எனக் கட்சிகள் அதிக விருப்பம் தெரிவித்தன. வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் வாக்குரிமை தொடர்பில் சைபர் பாதுகாப்பு, தூதரக மட்டத்திலான நிருவாகச் செயற்பாடுகள், தேர்தல் பிரசாரங்களின் நியாயத்தன்மை மற்றும் தேர்தல் செயற்பாடுகளைக் கண்காணிப்பது தொடர்பான பிரச்சினைகளையும் கட்சிகள் எழுப்பின.

முன்மொழிவுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது, தபால் மூல வாக்களிப்பு உரிமையை விரிவுபடுத்துவதற்காக மிக அதிகமான ஆதரவு கிடைத்துள்ளதுடன், நடைமுறைப்படுத்துவதற்காக அது முன்னோக்கி நகர்த்தப்படக்கூடிய ஒரு முன்மொழிவு என்பது தெளிவாகிறது. 23 அரசியல் கட்சிகளில் 22 கட்சிகள் (96 வீதம்) அதற்காக உடன்பாடு தெரிவித்துள்ளன. முற்கூட்டியே வாக்களித்தல் மற்றும் மாற்று வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அனைத்துக் கட்சிகளும் உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், எந்தவொரு கட்சியும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும், வெளிநாட்டு வாக்காளர்களுக்காக முற்கூட்டியே வாக்களிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் விதம் இன்னும் தெளிவாக இல்லை என்பதுடன், மாற்று வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாகப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. நடமாடும் வாக்களிப்பு நிலையங்களுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த ஆதரவு கிடைத்துள்ளதுடன், ஒரு அரசியல் கட்சி அதனை நடைமுறையில் செயற்படுத்த முடியாத யோசனையாகச் சுட்டிக்காட்டியுள்ளது. அதற்குப் பதிலாக நிலையான அல்லது தற்காலிக வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதே மிகவும் பொருத்தமானது எனக் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன. வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுக்கு வாக்களிக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கு கொள்கையளவில் உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான செயற்பாட்டு முறைமை இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பிரதான நான்கு வகைகளாக வகைப்படுத்தலாம். 13 கட்சிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளை எதனையும் முன்வைக்காமல் வாக்குரிமையை விரிவுபடுத்துவதற்கு உடன்பாடு தெரிவித்தன. மேலும் ஐந்து கட்சிகள் வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டு வாழ் இலங்கைச் சமூகம் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் ஆகியோரை வாக்களிக்கும் செயற்பாட்டில் உள்ளடக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. மூன்று கட்சிகள் கணினி முறைமைகளின் பாதுகாப்பு, பொதுமக்களின் அவநம்பிக்கை, மத்திய கிழக்கு நாடுகளில் சேவையாற்றும் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடைமுறைச் சாத்தியப்பாடுகள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அனைத்துக் கட்சிசார்ந்தவர்களுக்கும் சமமான தேர்தல் பிரசார வாய்ப்புக்களை வழங்குவது போன்ற நடைமுறைப் பிரச்சினைகளை எழுப்பின. ஒரு கட்சி மாத்திரம் யோசனைகளுக்கு உடன்படவில்லை. சில கட்சிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்களை முன்வைத்துள்ளமையால், இந்தக் பிரிவுகள் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்ட பிரிவுகளாகக் கருதப்படலாகாது.

தற்போதைய ஆளுங்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது தொடர்பான வாக்குறுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் தொழிலுக்காக நாட்டிற்குள்ளேயும் நாட்டுக்கு வெளியிலும் புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் வாக்களிக்கின்ற உரிமையை உறுதிசெய்தல் (பக்கம் 194 / தமிழ் பிரதி) அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசைகளுக்கு

தாம் வசிக்கும் நாட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (பக்கம் 221 / தமிழ் பிரதி) தொடர்பிலும் உறுதியளிக்கப்பட்டுள்ளன.

2025 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் **வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாகச் சட்டங்களை உருவாக்குவதற்கு** அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ள விருப்பத்தினை ப.்.வ்ரல் அமைப்பு பாராட்டுகிறது. குறித்த தீர்மானத்தின் மூலம் தற்போதுள்ள சட்டங்களைத் திருத்துவது அல்லது புதிய சட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காகத் தேர்தல் ஆணைக்குழு மற்றும் உரிய அமைச்சுகளின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஏற்கனவே வெளிநாடுகளில் வசிக்கும் தமது பிரஜைகளுக்கு வாக்களிப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமையும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உறுதிமொழிகளைச் சட்ட ஏற்பாடுகளாக மாற்றி நடைமுறைப்படுத்துமாறு ப.்.வ்ரல் அமைப்பு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. அத்துடன், நாட்டிற்குள் வாழ்ந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்திற்கு வர இயலாமைக்குள்ளாகும் வாக்காளர்கள் தொடர்பிலும் இதே அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும் எனப் ப.்.வ்ரல் அமைப்பு வலியுறுத்துகிறது.

இந்த உறுதிமொழிகள் ப.்.வ்ரல் அமைப்பினால் உயர்வாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தலில் அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆரம்பிப்பதற்குரிய முதலாவது சந்தர்ப்பமாக இது அமைகிறது.

## ப.்.வ்ரல் அமைப்பின் பிரதான கோரிக்கைகளும் பரிந்துரைகளும்

1. **அரசாங்கத்திற்கு:** மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக விரைவில் அரசியல் தீர்மானமொன்றை மேற்கொண்டு, தேர்தல்களை நடத்துவதற்குரிய குறிப்பிட்ட திகதியொன்றை அல்லது காலவரையறையுடன் கூடிய தெளிவான செயற்பாட்டுத் திட்டமொன்றை வெளியிட வேண்டும். மேலும் குழுக்களை நியமித்தலோ அல்லது தொழில்நுட்பக் காரணங்களைக் கூறி தாமதப்படுத்தலோ இன்றி, தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை உடனடியாக முன்வைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. **பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு:** மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பரிந்துரைகளை உடனடியாக நிறைவு செய்ய வேண்டும் என்பதுடன், அரசியல் கட்சிகளுக்கிடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின்படி பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
3. **அரசாங்கம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு:** மாகாண சபைத் தேர்தல்களுக்காக மாற்று வாக்களிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் உரிய சட்டத் திருத்தங்களில் உள்ளடக்க வேண்டும். அதன் கீழ், முதற்கட்டமாகத் தபால் மூல வாக்களிப்பு வசதிகளை விரிவுபடுத்துவதும், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் முற்கூட்டியே வாக்களிக்கும் முறைகள் மற்றும் மாற்று வாக்களிப்பு நிலையங்களை நிறுவும் முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.
4. **உரிய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்கு:** மாகாண சபைகள், நீதி மற்றும் சிறைச்சாலைகள், சுகாதாரம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களுக்குரிய அமைச்சுகளும் நிறுவனங்களும் அத்துடன் சட்ட வரைஞர் திணைக்களமும் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும். அதன் மூலம் விளக்கமறியல் சந்தேகநபர்கள், வைத்தியசாலை நோயாளர்கள், மாற்றுத்திறனாளிகள், தனியார் துறை ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுச் செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு வாக்களிப்பதற்காகத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அத்துடன், தனியார் துறை ஊழியர்கள் வாக்களிப்பதற்காக வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டுத் தேர்தல் தினத்திற்கு முன்னர் குறைந்தது இரண்டு நாட்களுக்கு விடுமுறை வழங்கும் முன்மொழிவையும் பரிசீலிக்க வேண்டும்.

5. **தேர்தல் ஆணைக்குழுவிற்கு:** மாற்று வாக்களிப்பு முறைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் ஏதேனும் முன்னோடித் திட்டங்களுக்கு தெளிவான தகுதி தொடர்பான வகுதிகள், வெளிப்படைத்தன்மை வாய்ந்த நடைமுறைகள் மற்றும் சுயாதீனமான கண்காணிப்பு முறைமை ஆகியவற்றை ஸ்தாபிக்க வேண்டும். அத்துடன், குறித்த திட்டத்தின் பெறுபேறுகள் மற்றும் மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகள் அடங்கிய அறிக்கையொன்றைப் வெளியிட வேண்டும் என்பதுடன், அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அனுபவங்களை எதிர்காலத் தேர்தல்களில் இந்த முறைகளை மிகவும் விரிவாக நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

தகுதியான எந்தவொரு பிரஜைக்கும் தான் சேவையாற்றும் இடம், தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் அல்லது வசிக்கும் இடம் என்பனவற்றின் காரணமாக வாக்குரிமை மறுக்கப்படக் கூடாது எனப் ப.ஃ.வ்ரல் அமைப்பு வலியுறுத்துகிறது. இந்த மாற்று வாக்களிப்பு முறைகளைப் மாகாண சபைத் தேர்தல்களில் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம், அவற்றை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு முன்னர் அவசியமான பாதுகாப்புச் செயற்பாடுகளைப் பரிசோதித்து மதிப்பிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.



ரோஹண ஹெட்டியாராச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (ப.ஃ.வ்ரல்)
இல. 16, பாய்ட் பிளேஸ், பாமன்கடை வீதி, கொழும்பு 06
செல்லிடப்பேசி: 94 777590154
தொலைபேசி: 94 112558570 / 9411 2558571
தொலைநகல்: 94 11 2558572
மின்னஞ்சல்: paffrel@sltnet.lk
இணையத்தளம்: www.paffrel.com